[1996 ஆகஸ்ட் 20

33--

சாயப்பட்டறைகள் விவரம்

வினா எண் *1116*--**திரு. வீ. தமிழ்மணி** : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் சாயப்பட்டறைகள் எத்தனை உள்ளன? அவை எங்கெங்கு உள்ளன?

(ஆ) இல்லையெனில், சாயப்பட்டறை ஆரம்பிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் சாயப்பட்டறைகள் *49* உள்ளன. அவற்றில் ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை அரசுத்துறையின் கீழ் ஈரோட்டில் செயல்படுகிறது. இதர *48* சாயப்பட்டறைகளில் ஏழு திருச்செங்கோட்டிலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் பதின்மூன்றும் மதுரை மாவட்டத்தில் இருபத்தெட்டும் செயல்படுகின்றன.

(ஆ) புதிதாக சாயப்பட்டறை ஆரம்பிக்கும் எண்ணம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

34--

நெசவாளர்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் விவரம்

வினா எண் *1616*---**திரு. கே. சுந்தர்** : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) *1990*-லிருந்து *1995* வரை நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், உத்திரமேரூர் தொகுதியில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?